முருகப்பெருமான் துணை

**மகான் பெருமிழலைக் குறும்ப நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.08.2022, ஞாயிற்றுக்கிழமை

1. ஞானிகள் பூசை உலகோர் செய்து
ஞானிகளாகவே மாற்றம் பெற்றிட
ஞானியாக வந்தருளும் அரங்கனே
ஞான வள்ளலே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது நள்ளி திங்கள்
குறைவிலா இருபான்நவ திகதி கதிர் வாரம்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 29 நாள், 14.08.2022 ஞாயிற்றுக்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகனுக்கு பெருமிழலைக் குறும்ப நாயனார் யானும்
3. யானும் உலகோர் நலமுற உரைப்பேன்
உண்மைபட மக்களை நோக்கி
ஞானம் தரும் கலியின் தவகுரு
ஞானபண்டிதனின் அவதாரம் அரங்கனே
4. அரங்கனின் ஆசிபலம் பெற்ற
அன்பர்களை கொண்டே உலகில்
வரங்கள் மிகுதி உலகம்தனில்
வளமும் நல்ல பாதுகாப்பும் பெருகும்
5. பெருகுமே ஞான வான்கள் படை
பேராசான் தீட்சை பலம் வழி
முருகப் பெருமான் அருளை பெற்று
முழுமை ஞானம் கண்டு தேறுவர்
6. தேறவே சமூக நலம் காத்திட
தேசிகன் தயவு நெறியும் தருமமும்
அறமாக எங்கும் பரவி நின்று
அற்புதம் தன்னை படைத்திட நேரும்
7. நேருமை கொண்ட மக்களை
நீதிமான்களை அரங்கன் ஞானம்
உருவாக்கி வருமுலகில் இனிதே
உயர்வான ஞான ஆட்சி அமையக் கூடும்
8. கூடவே வளர்ச்சிக்கு உண்டான
கூறிடுவேன் சகல துறைகளும்
இடரின்றி ஞானவான்கள் தலைமை
இனிதே கண்டு ஏற்றம் காணும்
9. காணுகின்ற வரிக் கொடுமைகள்
கட்டம் தரும் வரிச் சுமைகள்
ஞானவான்கள் ஆளுமை கண்டிட
நம்பிக்கை தரும் நிர்வாகபலம்கூடி

10. கூடியே மக்களை பாதுகாக்கும்
குறைவிலா திட்டங்கள் செயல்கள்
கூடியே உலகோர் மகிழும்படி
கும்பமுனி முதலான ஞானிகள் துணை கொண்ட

11. கொண்ட ஞான ஆட்சியதும்
குருவரங்கனால் உருவாக்கப் படும்
தொண்டர்களை ஞானிகளாக்கி
தேசிகனார் அவதாரம் பூர்த்தி ஆகும்
அருளாசி முற்றே

–சுபம்–